# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, பெப்புருவரி மாதம் 20 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூட்டி. 12/2006

**குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றத்தைக் கூட்டி ணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

முன்னுரை.

"குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம்" என அறியப்படுவதான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக, இதற்கு முன்னர் 1993 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலுதம் ;

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம், அது எக்குறிக்கோள்க ளுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல் வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதாத லாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ள தாதலாலும், தற்போது சொல்லப்பட்ட மன்றத்தைக் கூட்டிணைக்க வேண்டியதானது விரும்பத்தக்கதாகவும் தகுதியானதாகவும் இருப்பதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குடிமக்களின் வீரச் செயல் களுக்கான மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனவழைக்கப்படும்) குடிமக்க ளின் வீரச்செயல்களுக்கான மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப் படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைத்தல்" எனக் குறிப்பீடுசெய்யப் படும்) "குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம்" என்ற

2-PL 003282 -1,050 (2008/09)

பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமையுடனான கூட்டுத்தாபனமொன்றாகவிருத்தலும் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட பெயரைக் கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பி யாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவத்தையும் அதிகாரத் தையும் அது கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவன வாதல் வேண்டும் :-

(அ) உயிரினைப் பாதுகாத்தலுக்கான மதிப்பினை வளர்த்த லும் மேம்படுத்துதலும் ;

(ஆ) தனது உயிருக்கு ஆபத்தேற்படுவதனைப் பொருட்படுத் தாது, எவரேனும் குடிமகனின் உயிரையும் பகிரங்க ஆதனத்தையும் பாதுக்காப்பதற்கான தன்னிச்சையான செயலைத் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அங்கீ கரித்தலும் அவருக்கு வெகுமதியளித்தலும் ;

(இ) உயிரைப் பாதுகாப்பதற்கான காப்பீட்டு வழிமுறை களை மேம்படுத்தல் ;

(ஈ) உயிருக்கான பல்வேறு வகையினவான அபாயங்கள் அல்லது துரதிஷ்ட சம்பவங்கள் பற்றியும் அவற்றைத் தவிர்த்தல் பற்றியும் கல்வி, அறிவு மற்றும் பயிற்சி என்பவற்றை முன்னேற்றுதல் ;

(உ) உயிருக்கான பல்வேறு அபாயங்கள் பற்றியும் காப்பீட்டு முறைகளும் நுட்பங்களும் பற்றியும் விழிப்புணர்ச்சியை உருவாக்குதல் ;

(ஊ) உயிரினைப் பாதுகாத்தலும் குடிமக்களின் வீரச்செயல் பற்றிய துறையிலான செயற்பாடுகளை மேம்படுத் தலும் ;

(எ) மனிதனுக்கான மற்றும் மனிதர்சாரா உயிருக்கான கொடுமைக்கெதிரான வழிமுறைகளை ஏற்புடையன வாக்குதலும் மேம்படுத்தலும் ;

(ஏ) உலகக் குடிமக்களின் வீரச் செயல்களும் உயிரினைப் பாதுகாத்தலும் பற்றிய கருத்துருவுக்கு முன்னோடியாக விருப்பதற்குச் சர்வதேச ஒழுங்கமைப்பொன்றைத் தாபிப்பதற்கான இயைபியக்க ஊக்குவிப்பவராக விருத்தல் ;

(ஐ) குடிமக்களின் வீரச்செயல்களை துரதிஷ்ட சம்பவங் களைத் தடுத்தலுக்கான அதேவிதமான அல்லது அவை போன்ற குறிக்கோள்களையுடைய சர்வதேச ஒழுங்க மைப்புகளுடன் தொடர்புகளைத் தாபித்தலும் பேணுத லும், மனித குலத்திற்கு ஏற்படக்கூடிய துரதிஷ்ட சம்பவங் களும் அவற்றைத் தவிர்த்தலும் மீது சர்வதேசப் பயிற்சி, கல்வி முகாம்களை ஒழுங்கேற்பாடு செய்தலும் ;

(ஒ) உயிரைப் பாதுகாப்பதில் குடிமக்களின் வீரச்செயலைக் கௌரவம் செய்தல் ; அத்துடன்

(ஓ) குடிமக்களின் வீரச்செயல்களும் உயிர்காக்கும் முறைக ளும் பற்றிய கருத்துருவை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுகின்ற கலாசார செயற்பாடுகளிலும் ஊடக வெளிக்காட்டுகைகளிலும் ஈடுபடுதலும் அவற்றை மேம் படுத்துதலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கு தல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணங்களைக் கடனெடுக்கவும், சேகரிக்கவும், இலங்கையிலும் அல்லது இலங்கைக்கு வெளியேயும் உள்ளவர்களிடமிருந்து மானிக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வ தற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்கு மான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** *(1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைய தெரிவுசெய்யப்பட்ட கௌரவ தலைவர், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் மற்றும் தலைவரால் தெரிவுசெய்யப்படும் இருவருக்குக் குறையாத உறுப்பினர்களையும் கொண்ட நிருவாகக்குழு ஒன்றினால், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) இச்சட்டம் வலுவுக்கு வரும் தினத்திற்கு நேர்முந்திய தினத்தன்று பதவி வகிக்கும் சங்கத்தின் நிருவாகக் குழு கூட்டுத் தாபனத்தின் முதலாவது நிருவாகக் குழுவாதல் வேண்டும்.*

*(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், தாபகத் தலைவர் கூட்டுத்தாபனத்தின் தலைவராதல் வேண்டும்.*

*(4) தாபகத் தலைவரின் பின்னர் தலைவர் பதவி வெற்றிடமாக வருமிடத்து, அவரது குடும்பத்தின் அடுத்த அல்லது மிகக்கிட்டிய உறவினர் கூட்டுத்தாபனத்தின் தலைவராதல் வேண்டும்.*

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** *(1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்குமாகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-*

*(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சார்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல், விலக்குதல் மற்றும் பதவி துறத்தல் ;*

*(ஆ) நிருவாகக் குழு உறுப்பினர்களையும் பதவி தாங்குநர்களையும் தேர்ந்தெடுத்தல், நிருவாகக் குழு உறுப்பினர்கள் பதவி நீங்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன்*

நிருவாகக் குழு உறுப்பினர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தையும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவல்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரது நியமனம், தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் நடத்தை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் அல்லது நிருவாகக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை வெற்றிடங்களை நிரப்புதல் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்கள், நிகழ்ச்சிநிரல் கூட்டநடப்பெண் அத்துடன் அக்கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் நிருவாகக் குழுவினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும், தகுதியீனங்களும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் எவ்விதியும் இப்பிரிவின் (1) ஆம் பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்ற அதே கூட்டத்தில் அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், இப்பிரிவின் ஆக்கப்படும் கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நிருவாகக் குழு தீர்மானிக்கின்றவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும், பணிகளை நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) எங்கிருந்தேனும் பெறப்பட்டதான கூட்டுத்தாபனத்தின் பணமும் ஆதனமும் இதன்கண் எடுத்துக்கூறப்பட்ட குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காகவே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகமெதுவும், பங்கிலாபம், மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவே செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால்

தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பின ரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையி னால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று.

என்று பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத் தின் விதிகளால் பதவிப்பெயர் குறிப்பிடப்படும் கூட்டுத்தாபனத் தின் இரண்டு பதவி தாங்குநர்கள் முன்னிலையிலன்றி எச்சாதனத் திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும், அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*உறுப்பாண்மை இடாப்பு.*

**10**. (1) சபையானது உறுப்பினர்களின் இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். அதில் இச்சட்டம் தொடங் கும் திகதிக்கு முந்திய நாளன்று நிலையத்தின் உறுப்பினராக விருக்கும் ஒவ்வோராளும் அத்துடன் அதன் பின்னர் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வோரா ளும் அவரது பெயரை எழுதுவித்தல் வேண்டும்.

(2) இடாப்பானது பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், விலாசம் மற்றும் வாழ்க்கைத் தொழில் ;

(ஆ) இடாப்பில் உறுப்பினரின் பெயர் எழுதப்பட்ட தேதி ;

(இ) எவரேனும் ஆள் எத்தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தாரோ அத்தேதி.

*சங்கத்தினால் செல்மதியாக வுள்ளனவும் அதற்குச் செலுத்தப்பட வுள்ளனவுமான கடன்கள்.*

**11.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய தினத்தன்று சங்கத்துக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தன்று சங்கத் திற்கு வருமதியாகவுள்ள கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியன எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**12.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்ற வகையில் அல்லது வேறுவகையாக கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை ஒன்றில் பயன்பெறும் உரித்தாளராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையாகக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டத்தில் ஆற்றலுடையதாதலும், இயலுமானதாலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்படல்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து வருமதியாக இருக்கக்கூடிய அத்தகைய அங்கத்துவத் தொகையைத் தவிர ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கலைத்தலின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புகளையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட நிறுவனங்கள் அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அவற்றின் விதிகளினால் தடை செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கையளிக்கப்படலாம்.

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*